**செய்தி வெளியீடு எண் : 2014** **நாள் : 13.11.2022**

**<u>தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் கனமழை – முன்னெச்சரிக்கை மற்றும் பாதிப்புகள் குறித்த கண்காணிப்பு பணிகளை மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்கள் இன்று (13.11.2022) மாநில அவசரகால கட்டுப்பாட்டு மையத்தில் ஆய்வு</u>**

நேற்றைய தினம் (12–11–2022) தமிழ்நாட்டில் 37 மாவட்டங்களில் **19.14 மி.மீ. மழை** பெய்துள்ளது. அதிகபட்சமாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் 68.17 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

**<u>மிக கனமழை (115.6 முதல் 204.4 மி.மீ. வரை)</u>**

| வ. | மாவட்டம் | மழைமானி நிலையம் | பதிவான மழை |
|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | உத்திரமேரூர் | 169.00 |
| 2. | திருவள்ளூர் | திருத்தணி | 130.00 |
| 3. | ஈரோடு | கொடுமுடி | 117.60 |

**<u>கனமழை (64.50 முதல் 115.5 மி.மீ. வரை)</u>**

| வ. எண். | மாவட்டம் | மழைமானி நிலையம் | பதிவான மழை அளவு (மி.மீ.) |
|---|---|---|---|
| 1. | விழுப்புரம் | திண்டிவனம் | 109.00 |
| 2. | | செஞ்சி | 71.00 |
| 3. | | ஆர்.எஸ்.சி.எல் –3 செம்மேடு | 79.60 |
| 4. | | ஆர்.எஸ்.சி.எல் –3 வல்லம் | 84.00 |
| 5. | தேனி | ஆண்டிப்பட்டி | 83.80 |
| 6. | திண்டுக்கல் | பழனி | 66.00 |
| 7. | | கொடைக்கானல் படகு விடுதி | 90.40 |
| 8. | | கொடைக்கானல் | 74.00 |
| 9. | கோயம்புத்தூர் | சின்னக்கல்லாறு | 86.00 |
| 10. | | வால்பாறை பி.ஏ.பி | 71.00 |
| 11. | | வால்பாறை வட்டாட்சியர் | 69.00 |
| 12. | | சின்கோனா | 71.00 |
| 13. | திருப்பூர் | மடத்துக்குளம் | 76.00 |
| 14. | | உப்பாறு அணை | 75.00 |
| 15. | திருவண்ணாமலை | ஜமுனாமரத்தூர் | 65.00 |
| 16. | செங்கல்பட்டு | செங்கல்பட்டு | 69.20 |
| 17. | | மதுராந்தகம் வட்டாட்சியர் | 111.00 |

| | | | |
|---|---|---|---|
| 18. | திருவள்ளூர் | ஊத்துக்கோட்டை | 95.00 |
| 19. | | சோழவரம் | 80.00 |
| 20. | திருப்பத்தூர் | பொதுப்பணித்துறை ஐ.பி. | 96.20 |
| 21 | | டி.சி.எஸ். ஆலை | 68.00 |
| 22. | | திருப்பத்தூர் | 78.20 |
| 23. | | ஆலங்காயம் | 96.60 |
| 24. | கிருஷ்ணகிரி | வட்டார வளர்ச்சி அலுவலகம், | 97.00 |
| 25. | | சின்னார் அணை | 95.00 |
| 26. | மதுரை | எழுமலை | 64.80 |
| 27. | காஞ்சிபுரம் | வட்டாட்சியர் அலுவலகம், | 89.20 |

**சென்னை**

- பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் சராசரியாக **47.01 மி.மீ.** மழை பெய்துள்ளது.
- அதிகமான மழைப்பொழிவு கத்திவாக்கம் – 97.8 மி.மீ., மதுரவாயல் – 97.2 மி.மீ., அண்ணா நகர் மலர் காலனி 68.10 மி.மீ., பெருங்குடி – 66.6 மி.மீ., மணலி – 64.8 மி.மீ. ஆகிய மழைமானி நிலையங்களில் பதிவாகியுள்ளது.
- 13–11–2022 அன்று ஒரு சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.
- 169 நிவாரண மையங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.
- தாழ்வான பகுதிகளில் மழை நீரை வெளியேற்ற 954 நீர் இறைப்பான்கள் தயாராக உள்ளன. தற்போது, மழை நீரை வெளியேற்ற 447 நீர் இறைப்பான்களும், 13 JCB- களும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அறிவுரையின் பேரில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிவாரண நடவடிக்கைகள்**

தமிழ்நாட்டில் பரவலாக கனமழை பெய்ததை அடுத்து **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 12–11–2022 அன்று தலைமைச் செயலகத்தில்** அரசு உயர் அலுவலர்களுடன் **ஆய்வு** மேற்கொண்டு முன்னெச்சரிக்கை, மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை துரிதப்படுத்த அறிவுரைகள் வழங்கினார்கள்.

- 12–11–2022 அன்று சேலம் மாவட்டத்தில் 1 மனித உயிரிழப்பும், திருவண்ணாமலை மாவட்டத்தில் 1 மனித உயிரிழப்பும் ஆக மொத்தம் 2 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளது. இறந்த நபர்களது குடும்பத்திற்கு ரூ.4.00 லட்சம் நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் நேற்று பெய்த கனமழையின் காரணமாக 12-11-2022 அன்று

- 83 கால்நடை இறப்புகள் பதிவாகியுள்ளது.
- 538 குடிசைகள் / வீடுகள் சேதமடைந்துள்ளன

கால்நடை இறப்பு மற்றும் சேதமடைந்த வீடுகள் / குடிசைகளுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**நிவாரண மையங்கள்**

| வ. எண். | மாவட்டம் | மொத்த நிவாரண | நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | குடும்பங்கள் | ஆண் | பெண் | குழந்தைகள் | மொத்தம் |
| 1. | மயிலாடுதுறை | 32 | 7156 | 6978 | 7184 | 2415 | 16577 |
| 2. | கடலூர் | 3 | 36 | 28 | 29 | 26 | 83 |
| 3. | செங்கல்பட்டு | 1 | 21 | 23 | 20 | 25 | 68 |
| 4. | விழுப்புரம் | 1 | 12 | 15 | 18 | 24 | 57 |
| 5. | தேனி | 2 | 10 | 6 | 19 | 8 | 33 |
| 6. | காஞ்சிபுரம் | 1 | 7 | 6 | 8 | 8 | 22 |
| 7. | திருவள்ளூர் | 1 | 2 | 1 | 2 | 4 | 7 |
| | **மொத்தம்** | **38** | **7232** | **7050** | **7259** | **2498** | **16807** |

**மீட்புப் படை**

- தேடல், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக நீலகிரி, திண்டுக்கல் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களுக்கு தலா 1 குழு வீதம் தேசிய பேரிடர் மீட்புப் படையின் 70 வீரர்களை கொண்ட 3 குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேலும், கடலூர், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், மயிலாடுதுறை மாவட்டங்களில் 163 வீரர்களை கொண்ட தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் 5 குழுக்கள் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

**நீரில் மூழ்கிய பயிர்கள்**

- மயிலாடுதுறை, கடலூர் உள்ளிட்ட 24 மாவட்டங்களில், சுமார் 45,826 ஹெக்டேர் நெற்பயிர் நீரில் மூழ்கியுள்ளது. இதனை விரைவில் வடியவைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**சீரமைப்புப் பணிகள்**

- மயிலாடுதுறை மாவட்டத்தில், தற்போது மழை நீர் விரைந்து வடிந்து வருகிறது. கனமழையின் காரணமாக ஏற்பட்ட சேதங்களை சீரமைக்க அனைத்துத் துறை அலுவலர்களும் கள அளவில் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.
- மயிலாடுதுறை மாவட்டத்தில், மின் விநியோகத்தை உடனடியாக சீரமைக்க தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் ஒரு தலைமைப் பொறியாளர், 2 கண்காணிப்பு பொறியாளர்கள், 4 செயற் பொறியாளர்கள் மற்றும் 150 பணியாளர்கள் அருகில் உள்ள மாவட்டங்களிலிருந்து மயிலாடுதுறை மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.
- மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், ஓதவந்தான்குடி கிராமம் வழியாக செல்லும் புதுமண்ணியாற்றின் வலது கரையில் ஏற்பட்ட உடைப்பு உடனடியாக சீரமைக்கப்பட்டுள்ளது.

**வானிலை முன்னறிவிப்பு**

- நேற்று வடகடலோர பகுதியில் நிலவிய குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, தமிழகத்தின் வட உள்மாவட்டங்களைக் கடந்து, தற்போது தென்கிழக்கு மற்றும் அதன் அருகில் உள்ள கிழக்கு மத்திய அரபிக் கடல் பகுதியில் நிலவுகிறது.
- **13-11-2022** அன்று **பெரும்பாலான இடங்களில்** இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.
- நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், தென்காசி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் **ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.**
- **14-11-2022 மற்றும் 15-11-2022** அன்று **பல இடங்களில்** இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.
- **16-11-2022** அன்று **சில இடங்களில்** இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

**மீனவர்களுக்கான முன்னறிவிப்பு**

- **13-11-2022 –** தென்கிழக்கு அரபிக் கடல் பகுதி அருகில் உள்ள லட்சத்தீவு பகுதி, கேரள கடற்கரைப் பகுதிளில் மணிக்கு 45-55 கி,மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும் என்றும்,
- **14-11-2022 அன்று** லட்சத்தீவு பகுதி மற்றும் அதன் அருகில் உள்ள தென்கிழக்கு அரபிக் கடல் பகுதிகளில் மணிக்கு 45-55 கி,மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும் என்றும் இந்திய ஆய்வு மையம் தெரிவித்துள்ளதால் மேற்சொன்ன பகுதிகளில் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அறிவுரையின் பேரில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்**

- கனமழையினை திறம்பட எதிர்கொள்ள தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் இவ்வலுவலக இ.இ.1(4) / 558 / 2022, நாள் 9-11-2022ன்படி அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.
- பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிக்கு மட்டும் 17 கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்
- இதர மாவட்டங்களுக்கு மொத்தம் 43 கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கு கூடுதலாக தலா 2 கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (37+6 = 43)
- தேசிய பேரிடர் மீட்புப் படை 1149 பேரும், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை 899 பேரும் தயார் நிலையில் உள்ளனர்.

- 121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்களும், 5093 நிவாரண முகாம்களும் தயார் நிலையில் உள்ளன.
- இதுவரை 1070 கட்டணமில்லாத தொலைபேசி மூலமாக 655 தொலைபேசி அழைப்புகள் வந்துள்ளது, அதில் 473 தொலைபேசி அழைப்புகள் சரிசெய்யப்பட்டுள்ளது. 182 தொலைபேசி அழைப்புகளை சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு விபரம்**

- இன்று காலை 8.00 மணி நிலவரப்படி செம்பரம்பாக்கத்தில் மொத்த கொள்ளளவு 24 அடி, தற்போது 20.50 அடி இருக்கிறது. தற்போது செம்பரம்பாக்கத்திற்கு 2187 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து 1156 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது.
- அதே போல, செங்குன்றம் (புழல்) ஏரியின் மொத்த கொள்ளளவு 21.20 அடி, தற்போது 18.92 அடியாக இருக்கிறது. தற்போது செங்குன்றம் ஏரிக்கு 756 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. 677 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது.
- நீர்த்தேக்கங்களிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்படுவதால், பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in